DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: S.T.C. No. 880/2022 |
| Session | ... | |
| | | Prosecution / PW-4 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி.சோபியா |
| Father's Name (or) | | |
| Husband Name | : | க/பெ.மைக்கேல்ராஜ் |
| Village | : | மண்டலக்கோட்டை |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(Accused present.).

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 23.06.2023

---

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் மண்டலக்கோட்டையில் வசித்து தனியார் துறையில் பணியாற்றி வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும், ஆஜர் எதிரியை தெரியும்.

2. 08.09.2021ம் தேதி காலை 08.30 மணியளவில் எனது பக்கத்து வீட்டில் இருக்கும் அ.சா.1ன் வீட்டருகே சத்தம் கேட்டு நான் போய் பார்த்தேன்.

3. அ.சா1ம், எதிரியும் இருவரும் வீதியில் தலை முடியை பிடித்துக் கொண்டு சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள். நான் போய் நின்று பார்த்தவுடன் எதிரி அவுசாரி முண்டை, தேவிடியா முண்டை என்று அ.சா.1 ஐ கெட்ட வார்த்தைகளால் திட்டினார்

4. பக்கத்திலிருந்த ஞானபிரகாசம், மதிவானண் ஆகியார்கள் சத்தம் போட்டு விலக்கிவிட்டார்கள். அதன்பின் அ.சா.1ன் மகன் அ.சா.1 ஐ அங்கிருந்து புகார் கொடுப்பதற்காக அழைத்துக் கொண்டு சென்றுவிட்டார்.

5. அ.சா.1ன் வீட்டு கேட், கதவு ஆகியவற்றை எல்லாம் எதிரி மிதித்து உடைத்துவிட்டார், அதோடு நான் வந்துவிட்டேன். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. அ.சா.1 எனது உறவினர் ஆவார். அ.சா.1ற்கும் எதிரிக்கும் அடிக்கடி இடப்பபிரச்சனை நடக்கும். நான் தற்போது முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளை தான் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

2. சத்தம் கேட்டு நான் சம்பவ இடம் செல்வதற்கு முன்பாக என்ன நடந்தது என்று தெரியாது. சம்பவத்திற்காக எதிரியும் அ.சா.1ன் மீது புகார் அளித்துள்ளார் என்றால் சரிதான்

3. அ.சா.1 எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஞானபிரகாசம் என்பவர் எதிரியின் கணவர் லூயிஸ் லவே மீது சிவில் வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

4. காவல் நிலையத்தில் வைத்து தான் என்னை போலிசார் விசாரித்தார்கள். அங்கு வைத்து கையெழுத்து செய்தேன். ஆஜர் எதிரி அ.சா.1 ஐ கெட்ட வார்த்தைகளால் திட்டவில்லை என்றாலும், தலைமுடியை பிடித்து இழுக்கவில்லை என்றாலும் அ.சா.1 எனது உறவினர் என்பதால் அ.சா.1 ற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிகறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: S.T.C. No. 880/2022 |
| Session | ... | |
| | | Prosecution / PW-5 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி.ஜெயா |
| Father's Name (or) | | |
| Husband Name | : | க/பெ.ஜஸ்டின் திரவியம் |
| Village | : | மண்டலக்கோட்டை, வில்லாரேந்தல் |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(Accused present.).

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 23.06.2023

---

**முதல் விசாரணை**

1. நான் மண்டலக்கோட்டை, வில்லாரேந்தலில் வசித்து கட்டிட வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும், ஆஜர் எதிரியை தெரியும்.

2. 08.09.2021ம் தேதி காலை 08.30 மணியளவில் நான் வேலைக்கு சென்று கொண்டிருந்தபோது அ.சா.1 வீட்டிற்கும் எதிரி வீட்டிற்கும் இடையில் சண்டை நடந்தது.

3. அ.சா.1 ஐ எதிரி தலைமுடியை பிடித்து இழுத்ததில் அ.சா.1 தகரகேட்டில் போய் இடித்து மல்லாந்து விழுந்துவிட்டார். எதிரி அ.சா.1 ஐ தேவிடியா முண்டை, அவுசாரி முண்டை என கெட்ட வார்த்தைகளால் திட்டினார்

4. நான் அதை பார்த்துவிட்டு வேலைக்கு சென்றுவிட்டேன். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. அ.சா.1 எனது அக்கா ஆவார். வில்லாரேந்தலுக்கும், மண்டலக்கோட்டைக்கும் அரை கிலோ மீட்டர் தூரம் இருக்கும். சம்பவ தினத்தன்று நான் புளியூருக்கு வேலைக்கு சென்றேன்.

2. எத்தனை மணிக்கு வேலைக்கு செல்வேன் என்றால் காலை 08.30 மணிமுதல் 09.00 மணிக்குள் சென்றுவிடவேண்டும். அ.சா.1, எதிரியை அடித்து எதிரிக்கு காயம் ஏற்பட்டு திருவாடானை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்த விவரம் தெரியுமா என்றால் அதுபற்றி தெரியாது நான் வேலைக்கு சென்றுவிட்டேன்.

3. நான் சம்பவத்தை பார்த்துவிட்டு 09.00 மணிக்கு வேலைக்கு சென்றுவிட்டேன். என்னை போலிசார் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். அங்கு வைத்து தான் கையெழுத்து செய்தேன்.

4. காவல் நிலையத்தில் எதிரியின் அத்தை ஜெர்சி, சவுரியம்மாள் ஆகியோர்கள் இருந்தார்கள். அ.சா.1 ற்கு தலையில் காயம் ஏற்பட்டதா என்று நான் கவனிக்கவில்லை.

5. நான் சம்பவ இடத்தில் இல்லை என்றும் அ.சா.1 எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.